2017 ஜூன் 28]

அதவத்தூரிலும், இருங்களூரிலும் இருக்கக்கூடிய கிடங்குகளுக்கு எடுத்துச்செல்லக்கூடிய தூரம் மிக அதிகமானதாக உள்ளது. அதோடு மட்டுமல்லாமல், வாடகைச் செலவும் அதிகமாக ஆகின்றது. எனவே, இந்தச் செலவினத்தைக் குறைப்பதற்கும், கால விரயத்தைக் குறைப்பதற்கும், கூடுதலான பணியாளர்களை நியமித்து வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்கும், மறுநாள் கொள்முதல் செய்யவிருக்கின்ற நெல்லை அன்றே கொள்முதல் செய்கின்ற வாய்ப்பை உருவாக்குவதற்கும், புஞ்சை சங்கேந்தியில் அந்த சேமிப்புக் கிடங்கினைக் கட்ட கால நிர்ணயம் செய்து, உடனடியாகக் கட்டிக் கொடுப்பாரா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மூன்றாவது முறையாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக புஞ்சை சங்கேந்தியில் நெல் சேமிப்புக் கிடங்கு கட்டிக் கொடுக்கப்படும். அதற்கு இடமும் தேர்வு செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய வரலாற்றில் 12,85,000 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள கிடங்குகளின் மொத்த கொள்ளளவை 22,44,000 மெட்ரிக் டன்னாக உயர்த்திக் காட்டியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவழியிலேதான் தற்போதும் கிடங்குகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று, தமிழ்நாடு முழுவதும் கட்டி நிறைவேறும் சூழ்நிலையில், இனி கிடங்குகள் தேவையே இல்லையென்கிற நிலையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எய்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

96—

தரம் உயர்த்துதல்

***3280—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சுழி தொகுதி, காரியாப்பட்டி ஊராட்சி ஒன்றியம், ஆவியூர் கிராமத்திலுள்ள துணை சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10—45

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பொதுவாக துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துகின்ற அந்தக் கொள்கை முடிவு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், காலையிலே உங்களுக்கு ஒரு கேள்வி கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு) நிறைய கேள்விகளை உங்களுக்கே கொடுத்துக்கொண்டிருந்தால், எப்படி? உங்களுக்குத்தான் காலையிலேயே ஒரு கேள்வி கொடுத்துவிட்டேன் அல்லவா, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், இது மாதிரியெல்லாம் செய்யக் கூடாது, உட்காருங்கள். இதெல்லாம் செய்யக் கூடாது, உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துகின்ற அந்தக் கொள்கை முடிவு அரசிடம் இல்லையென்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற திருச்சுழி தொகுதி, காரியாப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆவியூர் கிராமத்தில் விதிமுறைகளுக்கு*

2017 ஜூன் 28]

உட்பட்டு, நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குவதற்கு அரசினால் துறை ரீதியாக ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவியூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு ஆய்வு செய்யப்படும் என்ற செய்தியைச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்கு மகிழ்ச்சி. பொதுவாக ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்கின்றபோது அங்கே இருக்கக்கூடிய மக்கள்தொகையினுடைய அடிப்படையிலும், 2 சுகாதார நிலையங்களுக்கு இடையில் உள்ள தூரம் ஆகியவற்றின் அடிப்படையிலும் மத்திய அரசினுடைய விதிமுறைகளின்படி அரசு கணக்கிடுவதாக இருக்கின்றது. அது* population based or distance based *ஆக இல்லாமல்* need based *ஆக எங்கே தேவை இருக்கின்றதோ, தேவையின் அடிப்படையில், ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்குவதற்காக ஒரு* flexibility*–ஐ உங்களுடைய* policy*–ல் உருவாக்குவதற்கு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, மாநில அரசாங்கமே ஒரு* policy*–ஐ உருவாக்குவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதனை நான் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன். ஆவியூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், அது மதுரை–தூத்துக்குடி நெடுஞ்சாலையில் அமைந்திருக்கின்றது. அது மிகுந்த விபத்துப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், அங்கே இப்போது வேறு எந்தவிதமான மருத்துவ வசதியும் இல்லாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலும், அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6 ஆண்டுகளில் தங்களுடைய மாவட்டத்தில் மட்டும் 12 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல், விதிமுறை ஒன்று, 30 ஆயிரம் மக்கள்தொகை இருக்க வேண்டும். இரண்டாவது, 8 கிலோ மீட்டர் தூர இடைவெளியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும். இந்த விதிமுறைகளை நாங்கள் இப்போது வலியுறுத்துவது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல் need based அடிப்படையில், தேவைப்படுகின்ற இடங்களுக்கு, மலைப் பகுதி அல்லது பொது மக்கள் அவசியமாக ஓரிடத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றபோது, அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நீங்கள் குறிப்பிடுகின்ற ஆவியூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க தூரத்தின் அடிப்படையில் சாத்தியக்கூறுகள் அதிகமாக இருக்கின்றன என்று ஆய்வில் தெரிய வருகின்றது. மக்கள்தொகை மட்டும்தான் குறைவாக இருக்கின்றது. வருங்காலத்தில், முன்னுரிமை அடிப்படையில், தங்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையானது மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, need based அடிப்படையில், செய்து தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு நல்ல வரப்பிரசாதமாக அமையும் என்று நான் கருதுகின்றேன். அதேசமயத்தில், காரியாப்பட்டியில் வட்ட மருத்துவமனை இருக்கின்றது. அதுபோன்று திருச்சுழியிலும் வட்ட மருத்துவமனை இருக்கின்றது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போன்று

2017 ஜூன் 28]

இவை மதுரையிலிருந்து தூத்துக்குடி செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கக்கூடிய மருத்துவமனைகளாக இருக்கின்றன. அங்கே ஒரு Emergency Ward *இல்லாததனால், இரவு நேரங்களில் நடக்கக்கூடிய விபத்துகளால் நிறைய பேர் பாதிக்கப்படுகின்றார்கள்.காரியாப்பட்டி அரசு மருத்துவமனைக்கு இரவு நேரத்தில் வருகின்றபோது மருத்துவர்கள் அங்கே இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. 108 ஆம்புலன்ஸ் மட்டும்தான் இருக்கின்றது. அது வேறு இடத்திற்குச் சென்றிருந்தால், அந்த மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் இல்லாத ஒரு நிலைமை இருக்கின்றது. எனவே, ஆம்புலன்ஸ் ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும். அதேபோன்று திருச்சுழி வட்ட மருத்துவமனையில் கூடுதலாக மருத்துவர்களை நியமிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. எக்ஸ்ரே, ஸ்கேன் போன்ற அடிப்படை வசதிகள் அங்கே உருவாக்கப்பட வேண்டியிருக்கின்றது. இவை அனைத்தையும் நிறைவேற்றித் தருவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விபத்துக் கால சிகிச்சை மையங்களுக்கு மிக அதிக முக்கியத்துவம் வழங்கி, பல்வேறு வகைகளில் நிதிகளையெல்லாம் வழங்கியிருக்கின்றார்கள். அவை நம்முடைய சட்டமன்றத்தில் நல்ல அறிவிப்புகளாக வர இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கின்ற கோரிக்கைகளுக்கெல்லாம் துறை ரீதியாக ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட* King Institute *வளாகத்தில் மத்திய அரசின் சார்பில் வயது*

மூத்தோருக்கான மருத்துவமனை ஒன்று கடந்த ஒரு வருடமாகக் கட்டப்பட்டு வருகின்றது என்பதை துறையின் அமைச்சர் அவர்கள் அறிவாரா? அறிந்திருப்பின், மாண்புமிகு அமைச்சரோ அல்லது உயர் அலுவலர்களோ இதுவரை எத்தனை முறை அந்த மருத்துவமனையை ஆய்வு செய்திருக்கின்றார்கள் என்பதைத் தங்களின் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கொஞ்சம் வருத்தத்தை ஏற்படுத்துகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் மூப்பியல் சிகிச்சைத் துறை, Geriatric Department–ஐ மத்திய அரசின் நிதியோடு கேட்டுப் பெற்று, அதன் பின் இடத்தைத் தேர்வு செய்து, அதனை நானும், அரசுச் செயலாளர் அவர்களும் பல முறை ஆய்வு செய்திருக்கின்றோம் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

திரு. கோ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் நாங்கள் வணங்கும் குல தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொண்டிருக்கும் திசைநோக்கி வணங்கி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் நல்லாட்சி நடத்திவரும் எங்கள் மண்ணின் மைந்தர் தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.

முற்பகல் 10–50

சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பாகல்பட்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் நல்ல நிலையில் இயங்கிவருகிறது. அதன்மூலம் ஏழை மக்கள் மிகவும் பயனடைந்து

2017 ஜூன் 28]

வருகிறார்கள். அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புற நோயாளிகளும், பிரசவத்திற்கு கர்ப்பிணிப் பெண்களும் அதிக அளவில் வருகின்றனர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தருவாரா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். ஏற்கெனவே, இந்தக் கோரிக்கையினை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் மனுக்களாகவும் கொடுத்திருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தரம் உயர்த்தக் கோரும் கோரிக்கையினை அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.*

திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசியா கண்டத்தின் முதல் பெண் மருத்துவராகத் திகழ்ந்தவர், எங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் ஆவார்கள். புதுக்கோட்டை மன்னர் அவர்கள், அன்றைக்கு அவர்களுக்காகத் தனி ஆணை பிறப்பித்து, கல்லூரியில் படிப்பதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தந்தார். சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றி, பல சீர்திருத்தக் கருத்துகளையும், கொள்கைகளையும் சட்டமன்றப் பேரவையில் முழங்கியவர். அப்படிப்பட்ட சிறப்பு மிகுந்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களை கௌரவிக்கின்ற வகையில், புதுக்கோட்டையில் புதிதாகத் துவங்கியிருக்கிற அரசு மருத்துவக் கல்லூரிக்கு, அவர்களுடைய பெயரை வைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், என்னுடைய திருமயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராங்கியம் அரசு மருத்துவமனை, 24 மணி

நேர ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட இருந்த நிலையில், வேறு ஊருக்கு மாற்றப்பட்டுவிட்டதால், அந்தப் பகுதி மக்கள் மிகுந்த ஏமாற்றத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். அங்கு போதிய மருத்துவ வசதி கிடையாது. எனவே, அப்பகுதியில், 24 மணி நேர மருத்துவ வசதியும், மகப்பேறு மருத்துவமும் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள், இந்தியாவின் முதல் பெண் மருத்துவர். அவர் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர். புதுக்கோட்டை மண்ணில் பிறந்தவர். புதுக்கோட்டையில் தற்போது செயல்பட்டு வருகின்ற மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் பெயரில்தான் இயங்கி வருகிறது என்பதைத் தாங்களும் அறிவீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரிக்கு நேரடியாக வந்திருந்தபோது, அந்த நிகழ்ச்சி முடிந்ததற்குப் பின்னர், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு Rotary Club, Lions Club மற்றும் பல்வேறு இலக்கிய, சங்க அமைப்புகளைச் சேர்ந்த அனைவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரில் வந்து சந்தித்தார்கள். அப்பொழுது அவர்கள் பொது மக்கள் சார்பில், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களது பெயரை வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நேரடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வைத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அவர்களை அழைத்துக் கனிவோடு பேசி, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களது பெருமைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, அந்தக் கோரிக்கையைக் கனிவோடு பரிசீலிக்கிறேன் என்று அவர்களிடத்தில் சாதகமான பதிலை ஏற்கெனவே தெரிவித்திருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2017 ஜூன் 28]

கடந்த கூட்டத் தொடரிலே, நீங்கள் பொன்னமராவதி பாப்பாயி அரசு மருத்துவமனையை மாற்ற வேண்டும் என்று கேட்டிருந்தீர்கள். அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற ராங்கியத்திற்கும் உரிய நடவடிக்கையினை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

97—

குளிர்பதனக் கிடங்கு

***3555—திரு. கி. மாணிக்கம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், பாலமேடு பகுதியில் பழம் மற்றும் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், பாலமேடு பகுதியில் பழம் மற்றும் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம், இருக்கையில் இல்லை.*